செ.வெ.எண் : 08/ ஜூலை நாள் : 04.07.2017

**இராமநாதபுரம் மாவட்டம்**

**முத்தவல்லிகள்/நிர்வாகக்குழு தேர்வு செய்வதற்கு,**
**தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய**

**மாவட்ட அளவிலான தேர்தல் பார்வையாளர்கள் குழுக்கான பட்டியலில்**
**சேர்ப்பதற்கு ஆகிய பணிகளில் முன் அனுபவமிக்க**
**முஸ்லீம் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மூலம் பொதுத்தேர்தல்கள், கூட்டுறவு மற்றும் உள்ளாட்சி தேர்தல்கள் நடத்துவதில் அனுபவம் வாய்ந்த வருவாய்த்துறை, கூட்டுறவுத் துறை, நகராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற முஸ்லீம் நபர்களிடமிருந்து பள்ளிவாசல்கள் மற்றும் இதர வக்ஃபுகளுக்கு முத்தவல்லிகள்/நிர்வாகக்குழு தேர்வு செய்வதற்கு தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய மாவட்ட அளவிலான தேர்தல் பார்வையாளர்கள் குழுக்கான பட்டியலில் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு தேர்தலுக்கும் தகுந்த மதிப்புறு தொகை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் முழு சுய குறிப்புடன் தமிழ்நாடு வக்ஃபு வாரியம், முதன்மை செயல் அலுவலர், சென்னை, என்ற முகவரிக்கு 05.07.2017 மாலை 5.00 மணிக்குள் அனுப்ப வேண்டும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**